

மதுரை திருப்பாலை இ.எம்.ஜி யாதவா கல்லூரியில் நடைபெற்ற அரசு விழாவில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை சார்பில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்டத்தின் கீழ் இரண்டாயிரம் அங்கன்வாடி பணியாளர்களுக்கு கைப்பேசிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார் தலைமையில் வழங்கினார். மேலும் இந்நிகழ்வில் பகுதி செயலாளர்கள் சசிகுமார், மருது பாண்டியன், கௌரி சங்கர், உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்



கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் கூட்டுறவுத்துறையின் சார்பில் நேற்று முன்தினம் (13.3.2026) சிவகங்கை மாவட்டம், இளையான்குடி பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில், சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் இளையான்குடி கிளைக்கான புதிய கட்டட கட்டுமானப் பணியினை, அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். உடன் மேலாண்மை இயக்குநர் (மத்திய கூட்டுறவு வங்கி) திருமதி உமா மகேஸ்வரி, திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன், இளையான்குடி பேரூராட்சி தலைவர் பி.ஏ.நஜீமுதீன், பொது மேலாளர் (மத்திய கூட்டுறவு வங்கி) செந்தில்குமார் உட்பட பலர் உள்ளனர்.

மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் -

# பகுதிக் கழக செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம்!



## வணிகவரி (ம) பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி தலைமை !

**15.03.2026 ஞாயிற்றுக்கிழமை**
**நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா!**

| வ.எண் | பகுதி | இடம் | நேரம் |
|---|---|---|---|
| 1. | ஆனையூர் | ஐஸ்வர்யம் திருமண மஹால், ஆனையூர். | மாலை 3.00 மணி |
| 2. | கண்ணனேந்தல் | குறிஞ்சி திருமண மஹால், யாதவா பெண்கள் கல்லூரி அருகில், திருப்பாலை. | மாலை 5.00 மணி |

குறிப்பு : பகுதி வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தொகுதிப் பொறுப்பாளர், அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், BLA2, BLC, BDA, வெல்லும் தமிழ்பெண்கள் மகளிர் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம்.

**அமைச்சர் பி. மூர்த்தி**
செயலாளர்
மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க.

தி.மு.க.வுக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது!

# மீண்டும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஆட்சி அமையும்!

## தென்காசியில் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் பேட்டி!

தென்காசி, மார்ச் 15-

குற்றாளத்தில் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் செய்தியாளர் களுக்கு அளித்த பேட்டி யின்போது தெரிவித்ததாவது.

கழகத் தலைவர் முதல மைச்சர் தளபதி அவர்கள் பொறுப்பேற்றது முதல் அனைத்து தரப்பு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம் படுத்தி வருகிறார்கள். எனவே அவரே மீண்டும் முதல்வராக வரவேண்டும் என மக்கள் எண்ணுகி றார்கள்.

பேரறிஞர் அண்ணா வின் நோக்கம், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்க ளின் செயல்பாடு உள்ளிட் டவை தொடர்வதற்கு நான் ஒரு துரும்பாக இருந்து உதவி செய்வேன்.தி.மு.க. வுக்கு வெற்றி வாய்ப்பு பிர காசமாக உள்ளது. அதற்கு காரணம் முதலமைச்சர் அவர்களின் சிறப்பான ஆட்சி தான் சாட்சியாகும்.

எடப்பாடி தமிழக மக் களை எந்த அளவிற்கு மதித் தார் என்பதை நாட்டு மக் கள் நன்கு அறிவார்கள்.அது இந்த தேர்தலில் எதிரொ லிக்கும். அ.தி.மு.க.வில் எடப்பாடியின் தலை மையை ஆட்சியிலும் சரி, கட்சியிலும் சரி மக்கள் ஏற் கவில்லை. அதனால்தான் அவருக்கு தொடர் தோல்வி மக்கள் தந்துள்ளார்கள். சட் டம் ஒழுங்கை பொறுத்த வரை எங்கெல்லாம் பிரச் சினை ஏற்படுகிறதோ அங்கு சென்று முழுமை யாக சரி செய்யும் பணியில் அரசு ஈடுபடுகிறது.பிரச் சினை செய்பவர்களுக்கு உரிய தண்டனையை வழங் கும் அரசாக இந்த அரசு செயல்படுகிறது. அன்றா டம் பல பிரச்சினைகள் ஏற் படலாம் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு தலையிட்டு குற்றம் இழைத்தவர்களுக்கு உரிய தண்டனையை வழங்கி வரு கிறது.

தேசிய ஜனநாயக கூட் டணியை பொறுத்தவரை பாராளுமன்றத் தேர்தலில் மக்கள் என்ன விருப்ப வழங்கினார்களோ,அதே தான் சட்டசபை தேர்தலில் மக்கள் வழங்குவார்கள் தமி ழக அரசின் நிதி ஒன்றிய அரசு கோடிக்கணக்கில் செல்கிறது.அதனை மாநிலத் துக்கு ஒரு பிரச்சினை ஏற்ப டும் பொழுது சமநிலை யோடு செயல்பட்டு திரும்பித் தர வேண்டும். விஜய் கொள்கை என்ன கோட்பாடு என்ன என்பது அவரைப் பார்த்து தான் கேட்க வேண்டும்.சிறப் பான திட்டங்களால் தி.மு.க.2 வது முறையும் ஆட்சிக்கு வந்தது என்ற வர லாற்றுச் சாதனையை கழ கத் தலைவர் முதலமைச்சர் தளபதி அவர்கள் உருவாக் குவார்கள்.

இவ்வாறு முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் தெரிவித்தார்.



மதுரை வடக்கு தொகுதிக்குட்பட்ட சீமான் நகர் நூல்பட்டறை தெருவில் ரூபாய் 10லட்சம் மதிப்பீட்டில் மழை நீர் வடிகால் அமைக்கும் பணிகளை கோ.தளபதி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் மாமன்ற உறுப்பினர் தன்ராஜ், பகுதி செயலாளர் மேலமடை சித்திக், வட்டச் செயலாளர் சுரேஷ், பொறியாளர் வெங்கடேஷ், சிறுபான்மையினர் நல பிரிவு முகமது யாசின் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், மாநகராட்சி அதிகாரிகள், பொதுமக்கள் பங்கேற்றனர்.

## தி.மு.க. வழக்கறிஞர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. வழக்கறிஞர் அணிச் செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி. அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணியின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### திருப்பூர் தெற்கு மாவட்டம்

தலைவர் சி. நடராஜன் 22/176, சிவசுப்பிரமணியம், ஏரிப்பாளையம், உடுமலைப்பேட்டை - 642126, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் க. ராஜேஷ் மணி 4/120ஏ, தளி ரோடு, பள்ளபாளையம், உடுமலைப்பேட்டை - 642112, திருப்பூர் மாவட்டம்.

அமைப்பாளர் டி.எஸ். பொன்ராஜ் 1/247, சித்தாண்டிஸ்வர் கார்டன், ஏரிப்பாளையம், உடுமலைப்பேட்டை - 642126, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் 1) இரா. மகேஸ்வரன் 506ஏ, குமரன் வீதி, காரத்தொழுவு அஞ்சல், மடத்துக்குளம் - 642238, திருப்பூர் மாவட்டம். 2) எம். இந்திரகலை நாச்சியார் 1, தாஜ் ஹோட்டல், கச்சேரி தெரு, உடுமலைப்பேட்டை - 642126, திருப்பூர் மாவட்டம். 3) வெ. சக்திவேல் 1/295, குமணன் வீதி, குமரலிங்கம், மடத்துக்குளம் - 642204, திருப்பூர் மாவட்டம். 4) எஸ்.ஆர். மோகன் சங்கர் 16/59, செங்கங்டிப்புதூர், வேடபட்டி, மடத்துக்குளம் - 642203, திருப்பூர் மாவட்டம். 5) நா. நாகமாணிக்கம் 230, கழுகரை, மடத்துக்குளம் - 642113, திருப்பூர் மாவட்டம்.

### திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்

தலைவர் கோ. சாமுவேல் பாஸ்கர்ராஜ் 8/8, பாகைநேரி, பாப்பான்குளம் அஞ்சல், நாங்குநேரி தாலுக்கா - 627110, திருநெல்வேலி.

துணைத் தலைவர் க. தவசிராஜன் அருணா கட்டிடம், இராதாபுரம் ரோடு, வள்ளியூர் - 627117, திருநெல்வேலி.

அமைப்பாளர் கே. பாலச்சந்தர் 62, மெயின் ரோடு, மூன்றடைப்பு, நாங்குநேரி தாலுக்கா - 627152, திருநெல்வேலி.

துணை அமைப்பாளர்கள் 1) எல். சுப்பிரமணியன் 75/28, தேவர் கீழத் தெரு, வள்ளியூர் - 627117, திருநெல்வேலி. 2) ஜெ. கிறிஸ்டோபர் 16/44, சகாயம் தெரு, புதியம்புத்தூர், மகேந்திரபுரி அஞ்சல், திருநெல்வேலி. 3) இ. சந்திரசேகர் 15/73, வடக்கு ரத வீதி, திருக்குறுங்குடி - 627115, திருநெல்வேலி. 4) எம். ராஜா நிர்மல் கிளாட்சன் 99, புவனேஸ்வரி காம்ப்ளெக்ஸ் இராதாபுரம் மெயின் ரோடு, வள்ளியூர் - 627117, திருநெல்வேலி. 5) அ. இக்னேஷியஸ் பிராங்ளின் 8/5, தெற்கு ரத வீதி, இராதாபுரம், திருநெல்வேலி.

### தஞ்சை வடக்கு மாவட்டம்

தஞ்சை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி துணைத் தலைவராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட பி. விக்னேஷ் அவருக்குப் பதிலாக **எம்.பி. மனோகரன்** , (24, எருத்துக்கார தெரு, மருத்துவக்குடி, ஆடுதுறை - 612101, திருவிடைமருதூர் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம்) அவர்கள்தஞ்சைவடக்குமாவட்டவழக்கறிஞர்அணிதுணைத்தலைவராகநியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 12-03-2026

**என்.ஆர்.இளங்கோ, எம்.பி.**
செயலாளர்
தி.மு.க. வழக்கறிஞர் அணி

மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாட்டை வஞ்சிக்கும்

# ஒன்றிய அரசையும் - துணை போகும் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து

## மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

மதுரை, மார்ச், 15-

தி.மு.க தலைமைக் கழ கத்தின் அறிவிப்பின்படி "தமிழ்நாட்டுக்கு திட்டங்க ளும் இல்லை, அடுப்பு எரிக்க கேஸ் சிலிண்டரும் இல்லை தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய அரசை யும் - துணை போகும் அடி மைக் கூட்டணியும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் இன்று (15.03.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்குதினமணி தியேட் டர் அருகில் கண்டன ஆர்ப் பாட்டம் நடைபெற உள் ளது. ம.தி.மு.க பொதுச்செ யலாளர் வைகோ அவர்கள் உரையாற்றுகிறார்.

மதச்சார்பற்ற முற்போக் குக் கூட்டணி கட்சிகளின் மாவட்ட செயலா ளர்கள் , மாவட்ட தலைவர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பி னர் கள், பகுதிக்கழக, வட்டக் கழக செயலாளர்கள், நிர் வாகிகள், அனைத்து அணிக ளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மதச்சார்பற்ற முற் போக் குக் கூட்டணி கட்சிகளின் கழக முன்னோடிகள் அனை வரும் திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் கோ .தளபதி கேட்டுக் கொண்டுள்ளார்.

கேஸ் சிலிண்டர் தட்டுப்பாடு ஒன்றிய அரசையும், அதற்கு துணை போகும் அடிமை அ.தி.மு.க.வையும் கண்டித்து

# நெல்லை மத்திய மாவட்டத்தில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.அறிக்கை!

நெல்லை, மார்ச் 15-

நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம். எல்.ஏ.விடுத்துள்ள அறிக் கையில் கூறியிருப்பதாவது.

இன்று (15.3.2026) ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு,



மதச்சார்பற்ற முற் போக்கு கூட்டணி கட்சிக ளின் சார்பில்,திருநெல் வேலி ரயில் நிலையம் முன்பு,நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. பொறுப் பாளர்,பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப் தலைமையிலும், நாரணம்மாள்புரம், சங்கர் நகர் பேரூர்கள் சார்பில், சங்கர் நகரில்,தலைமை செயற்குழு உறுப்பினர் பேச்சிப்பாண்டியன் தலை மையிலும்,மானூர் ஒன்றி யங்களின் சார்பில்,மானூ ரில். மானூர் மேற்கு ஒன்றிய செயலாளர் அன்ப ழகன்,கிழக்கு ஒன்றிய செய லாளர் அருள்மணி,தெற்கு ஒன்றிய செயலாளர் கல் லூர் மாரியப்பன் ஆகியோர் தலைமையிலும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகிறது.

ஆகவே நெல்லை மத் திய மாவட்டத்திற்கு உட் பட்ட மதச்சார்பற்ற முற் போக்கு கூட்டணி அனைத்து கட்சிகளின் மாநில, மாவட்ட நிர்வாகி கள்,மாநகர,பகுதி நிர்வாகி கள்,ஒன்றிய,பேரூர் நிர்வா கிகள்,வட்ட,கிளை நிர்வாகி கள்,உள்ளாட்சி பிரதிநிதி கள்,அனைத்து இயக்கங்க ளின் தொண்டர்களும் அந் தந்த பகுதிகளில் நடைபெ றும் ஆர்ப்பாட்டங்களில் திரளாக கலந்து கொண்டு கண்டனங்களை தெரிவிக்கு மாறு கேட்டுக் கொள்கி றேன்.

இவ்வாறு அவர் தெரி வித்துள்ளார்.

கேஸ் சிலிண்டர் தட்டுப்பாடு! ஒன்றிய NDA அரசையும் - அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் ரெ. மகேஷ் வேண்டுகோள்!



கன்னியாகுமரி, மார்ச் 15-

கழகத் தலைவர், தமிழ் நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி, கழக இளைஞர் அணி செயலா ளர், தமிழ்நாடு துணை முத லமைச்சர் உதயநிதி ஸ்டா லின் அவர்களின் வழிகாட் டுதலின்படி, ஒன்றிய பா.ஜ.க. NDA அரசின் தவ றான வெளியுறவுக் கொள் கையினாலும், முன்னெ ச்ச ரிக்கை நடவடிக்கை எடுக்காததன் விளைவாகவு ம் நாடு முழுவதும் சமையல் கேஸ் சிலிண்டருக்கும் - வணிக ரீதியிலான கேஸ் சிலிண்டருக்கும் தட்டுப் பாடு ஏற்பட்டு மக்கள் அவ தியுற்று வருகின்றனர். இதற்கு நமது கழகத் தலை வர், தமிழ்நாடு முதலமைச் சர் மு.க.ஸ்டாலின் அவர் கள் இந்திய பிரதமர் மோடி அவர்களுக்கு கடிதம் வாயி லாக வலியுறுத்தி இருந்தார்.

ஆனால் தற்போது வரை மக்களிடையே நிலவும் அச் சத்தைப் போக்கி நிலை மையை சீராக்க முறையான நடவடிக்கை எடுக்காத ஒன் றிய பா.ஜ.க. NDA அரசை யும் அதன் அடிமைக் கூட்ட ணியையும் கண்டித்து கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் சார்பில் மாபெ ரும் கண்டன ஆர்ப்பாட் டம் இன்று (15.03.2026 - ஞாயிறு) காலை 10.00 மணியளவில் நாகர்கோ வில், தலைமை தபால் நிலை யம் அருகில் வைத்து எனது தலைமையில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்"ந டைபெற உள்ளது.

அதுபோன்று அதே தினத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட் பட்ட ஒன்றிய, நகர, பேரூர் களிலும் அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்க ளின் தலைமையிலும், கூட் டணி கட்சிகளின் நிர்வாகி கள் முன்னிலையிலும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

ஆகவே, இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மதச்சார் பற்ற முற்போக்குக் கூட் டணி கட்சிகளின் தலைவர் கள், செயலாள்கள், நிர்வாகி கள், நாடாளுமன்ற உறுப்பி னர்கள், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. வின் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன் றிய, நகர, பகுதி, பேரூர், கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், நிர்வாகி கள், உள்ளாட்சி அமைப்பு களின் இந்நாள் முன்னாள் பிரதிநிதி கள், கழக நிர்வாகி கள், அனைத்து கூட்டணி கட்சிகளின் தொண்டர்கள் ஆர்ப்பாட்டத்தினை வெற்றி பெற செய்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ஜே.எஸ். இராசு

### மார்ச் 15 (2000)



கழகம் தொடங்கப்பட்டதிலிருந்து உறுப்பினராக தன்னை இணைத்துக் கொண்டவர். ஆரம்பக் காலத்தில் உயர்நிலைப் பள்ளி ஆசிரியராகவும் பணிபுரிந்தவர்.

கழக இதழ்களில் கதை, கட்டுரை, கவிதைகள் எழுதியுள்ளார். தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த எழுத்தாளராகவும் விளங்கியவர். திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழக செனட் உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

தமிழக சட்டப்பேரவைக்கு பெரம்பலூர் தொகுதியிலிருந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் சட்டமன்ற மேலவை, நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

"பெரம்பலூர் பகுதியில் ஆதிதிராவிட சமுதாயத்தில் தோன்றிய இராசு கழகத்தை வளர்த்திட அரும்பாடுபட்டவர். தெளிவான சிந்தனையாளர். தேனருவியெனப் பேசும் சொற்பொழிவாளர். தி.மு.கழகத்தின் மாசுமருவற்ற செயல்வீரர்" எனத் தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**